1989 நவம்பர் 21]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15,91,687 ரூபாய். சுமார் 16 லட்சம் ரூபாய்.

9-20 மணி

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள ஹெலிகாப்டரை விற்ற பிறகு புதிதாக ஹெலிகாப்டரை வாங்க அரசுக்கு உத்தேசம் உண்டா? மாநில அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் இருக்கும்போது, மாநில அரசினுடைய முதலமைச்சர் தேர்தல் சமயங்களிலே அதைப் பயன்படுத்த முடியாது என்கிற தடை இருக்கிறதே, அதை நீக்குவதற்கு இந்த அரசு தேர்தல் கமிஷனுக்கு முறையீடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பயன்படுத்த முடியாத ஹெலிகாப்டர் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன என்பதற்காகத்தான் அதை விற்றுவிட முடிவு செய்தோம். அதிலே கூட ஜம்மு-காஷ்மீர் மாநில அரசு 1 கோடி ரூபாய்க்கு அதை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது. 1.4 கோடி ரூபாய்க்கு வாங்குவதற்கு மேற்கு வங்கம் இசைவு தெரிவித்திருக்கிறது. அதை ஏற்றுக் கொண்டு இந்த ஹெலிகாப்டர் இங்கிருந்து புறப்படத் தயாராக இருக்கிறது.

அரசுத் தேர்வுகளுக்குக் கண்காணிப்பாளராகப் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊதியத் தொகை.

*3030 திரு. செ. இராமலிங்கம்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆசிரியர்கள் அரசுத் தேர்வுகளுக்கு கண்காணிப்பாளராகப் பணியாற்றியமைக்கு (invigilator) ஊதியத் தொகை எவ்வளவு வழங்கப்படுகிறது?

(ஆ) காலதாமதமின்றி வழங்க ஆணை பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆசிரியர்கள் அரசுத் தேர்வுகளுக்கு உதவி கண்காணிப்பாளராக பணியாற்றுவதற்கு நாளொன்றுக்கு ரூ. 6 உழைப்பூதியமாக வழங்கப்படுகிறது.

(ஆ) இந்த உழைப்பூதியம் தேர்வு முடியும் கடைசி நாளன்று தேர்வு மையத்திலேயே ஒட்டுமொத்தமாக நேர்முகமாக பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதால், இதில் காலதாமதம் என்பதற்கு இடமில்லை.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் இன்விஜிலேட்டர்களாக வேலைசெய்யும்போது, அவர்களுக்கு இந்த ஊதியம் காலதாமதமின்றி கொடுக்கப்படுவதாக அறிவித்ததற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆனால் அதே ஆசிரியர்களை வேறு இலாக்காக்கள் வோட்டர் லிஸ்ட் தயாரிப்பதற்கும் வேறுவிதமான காரியங்களுக்கும் பயன்படுத்தி, 6 மாதங்கள், 1 வருடம் எல்லாம் ஆகியும் கூட, அவர்களுக்கு உரித்தான அந்தத் தொகை கொடுக்கப்படாமல் இருப்பதனால், அவர்களிடையே ஒரு வெறுப்பு வளர்ந்திருப்பதை இந்த அரசு உணர்ந்து அதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்க இந்த இலாக்காவின் மூலம், அமைச்சர் அவர்கள் ஏதாவது செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. ஆனால் அப்படிப்பட்ட ஒரு கருத்து அந்தத் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டு, விரைவுபடுத்த முயற்சிக்கப்படும்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட பணியிலே ஈடுபடக்கூடிய ஆசிரியர்களுக்குத் தினசரி 6 ரூபாய் வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இருக்கக் கூடிய பல்வேறுவிதமான விலைவாசியில் இந்த 6 ரூபாயை வைத்துக்கொண்டு, ஒரு நாளைக்கு ஏற்படக்கூடிய சாதாரண செலவுகளைக் கூட அவர்களால் செய்ய முடியாத நிலையிருக்கிறது. எனவே இதை 10 ரூபாயாக உயர்த்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பணி ஆசிரியர்களுடைய கடமையிலே ஒன்றுதான். இது வேறு துறையைச் சேர்ந்த பணியல்ல. ஆசிரியர்கள் ஆண்டு முழுவதும் ஆற்றக்கூடிய பணிகளில் இந்தப் பணியும் நியாயமாக இடம் பெற வேண்டும். அவர்களுடைய போக்குவரத்துச் செலவிற்காக இன்னொரு தொகையும் வழங்கப்படுகிறது, வேறு இடத்திலேயிருந்து வந்து போகிறார்களே,

என்பதற்காக. ஆகவே இது குறைந்தபட்சமாகத் தோன்றி னாலும் கூட அண்மைக் காலத்திலே சில ஆண்டுகளுக்கு முன்பு இது உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஏற்கெனவே 4 ரூபாயாக இருந்தது, இப்போது 6 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதேபோல் அவர்களுக்குத் தரப்படுகிற போக்கு வரத்துச் செலவு என்ற அடிப்படையில் 20 கிலோ மீட்டர் வரை 16 ரூபாயும், 40 கிலோ மீட்டர் வரை 18 ரூபாயும் அதற்கு மேலே இருந்தால் 20 ரூபாயும் என்று அப்படியும் ஒரு தொகை வழங்கப்படுகிறது. எனவே, இதுபற்றி இப் போது உடனடியாக ஆராய்ந்து பதில் சொல்ல முடியாவிட் டாலும் தேவைப்படுகிறபோது ஆலோசிக்கப்படும்.

பொறியியல் படிப்பில் தடைமுறைக் கல்வி

*3418. திரு. கோ. வீரையன் :

திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொறியியல் (பி.இ.) படிக்கும் மாணவர்களுக்கு இடையில் புகுத்தப்பட்ட தடைமுறைக் கல்வியை நீக்கக் கோரி மாணவர்களிடமிருந்து அரசுக்கு ஏதும் கோரிக்கை வந் துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத்தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தடைமுறைக் கல்வியை நீக்குதல் என்பது பல்கலைக் கழக பாடத்திட்ட அமைப்பு குழுவின் பரிசீலனைக்கு உட் பட்டது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கல்வி நிலையங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, உதாரணமாக பாலிடெக்னிக், ஐ.டி.ஐ.